www.tamilarangam.net



**தெய்வம் உள்ளவரை மதம் இருந்துதான் தீரும்,**
**'இந்து மதம்' உள்ளவரை சாதி இருந்துதான் தீரும்,**
**சாதி உள்ளவரை தீண்டாமை இருந்துதான் தீரும்.**

*-பெரியார்-*

**VADU இதழ் -13,14 ஜூலை,செப்ர- 2008**

# மீண்டும் மற்றுமொரு வடு ஊடாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி

இவ்விதழ் நீண்ட தாமதத்திற்கு பின்னர் வெளிவருவதற்கு முதலில் எமது வாசகர்களிடம் மன்னிப்புக் கோருகிறோம். எமது இதழ் வெளியீட்டுக்கு பல தரப்பட்டோரிடம் இருந்து பல்வேறுபட்ட ஆதரவுகள் கிடைத்து வருகின்ற போதிலும் பொருளாதார சுமையை குறைத்துக் கொள்வதற்காக கை கொடுப்போர்களின் அளவு அரிதாகவே காணப்படுகின்றது. அதை விடுத்து பல்வேறுபட்ட வேலைப்பளுக்களும் இவ்விதழின் தாமதத்திற்கு காரணங்களாகும்.

இதழ் வெளியீட்டில் தாமதம் ஏற்படுகின்ற போதிலும் எமது முன்னணியின் செயற்பாடுகள் பல்வேறுபட்ட முனைகளிலும் வேகமாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆகஸ்ட் மாதம் எமது வேலைத்திட்டங்களை ஐரோப்பாவிற்கு வெளியே விஸ்தரிக்கும் வாய்ப்புக்கள் சில கிடைத்தன கனடாவில் இடம் பெற்ற கனடிய இலக்கிய சந்திப்பில் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் நோக்கங்களையும் செயற்ப்பாடுகளையும் பற்றி பிரச்சாரப்படுத்தும் வாய்ப்புக் கிடைத்தது. எமது முன்னணியின் தலைவருடைய முயற்சியின் ஊடாக இலக்கிய அரசியல் நண்பர்கள் வட்டத்தையும் தாண்டி தலித் சமூக விடுதலையில் ஆர்வம் கொண்ட பலதரப்பட்டோரையும் சந்தித்து தலித் அரசியலின் அவசியம் குறித்த ஆரோக்கியமான உரையாடல்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

எமது தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் வேலைத்திட்டங்கள் தமிழ் அரசியல் சூழலை நோக்கி தாக்கம் செலுத்த ஆரம்பித்திருப்பதன் அறிகுறிகளை எம்மீதான ஆதிக்க சாதி அவதூறுகளின் அதிகரிப்பை வைத்தே அறிந்துகொள்ள முடிகிறது.

கடந்த மாதம் பாரிஸ் நகரில் நாம் நடத்திய தலித் நூல்களின் வெளியீட்டு விழாவிலும் இலங்கை தலித் மக்களின் அரசியல் எதிர்காலம் பற்றிய கேள்விகள் கூடிய கவனம் பெற்றன. இதுவரை காலமும் இலங்கை தமிழ் அரசியலில் இருந்து வந்த அதிகார மையங்கள் எதிர்காலத்தில் கலைக்கப்பட வேண்டும். வடக்கு மாகாணசபையில், இன்று வடமாகாணத்தில் வாழும் தலித் மக்களின் சனத்தொகைக்கு ஏற்ப பிரதிநிதித்துவங்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்க வேண்டியதன் அவசியம் பற்றிவரை கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. எல்லா விதத்திலும் தலித் மக்களின் அரசியலின் எதிர்காலம் நோக்கிய பாதையில் நிராகரிக்கப்பட முடியாத உந்து சக்திகளாக எமது முன்னணி தொழிற்படத் தொடங்கியிருப்பதனை நாம் உணருகின்றோம். அதில் எமது வடு இதழின் பங்கும் நிறைந்திருப்பது பெரும் மகிழ்ச்சியே.

தொடர்புகட்கு:-
**F.D.S.D.S**
70, SQUARE DES BAUVES
95140 GARGES LES GONESSE
France
(E-MAIL:VADU.WORLD@hotmail.fr)

**நன்கொடை-1€**
**சந்தா வருடம்-15€**
**(தபாற்செலவு உட்பட)**

**இலங்கை,இந்திய வாசகர்களுக்கு இலவசம்.**

**வடிவமைப்பு - விஜி**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# அருந்ததியார் இயக்க வரலாறு



-எழில் இளங்கோவன்-



எல்.சி.குருசாமி

இன்றைய இட ஒதுக்கீடு உள் ஒதுக்கீடு எனும் விவகாரமானது இந்திய சமூக சூழலில் தற்போதைய முக்கிய அம்சமாக நிலவுகிறது. உள் ஒதுக்கீட்டு உரிமை கோரும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகிய சமூகமாக அருந்ததியர் சமூகம் உள்ளது. பார்ப்பனர்களால் "புருச சூக்தம்" எனும் வர்ணக் கோட்பாட்டின் விளைவால் இந்து சமூகத்தின் சாதியப் படி நிலையின் விளிம்பிற்கும் அப்பாலான ஓரத்திற்கு ஒதுக்கப்பட்ட சமூகமே அருந்ததியர் சமூகமாகும்.

தமிழ் நாட்டில் அருந்ததியர் சமூக நலன்களுக்காக போராடிய தலைவர்கள் பற்றிய செய்திகளையும் அச்சமூகம் எதிர் கொள்ளும் வாழ்வியல் சோகங்களையும் வெளிப்படுத்தும் ஒரு தொகுப்பாக வெளிவந்திருக்கிறது எழில். இளங்கோ அவர்களின் "அருந்ததியர் இயக்க வலராறு" எனும் நூல். தமிழ் நாட்டில் உருவாகிய அருந்ததியர் சமூக நல மேம்பாட்டிற்கு முன்நின்று உழைத்த முன்னோடிகளாக எல்.சி. குருசாமி, எச்.எம். ஜெகநாதன் போன்றோர் இருந்துள்ளார்களென்பதை இந்நூல் வழி புரிந்து கொள்ள முடிகிறது. தந்தை பெரியாருடன் இவர்களுக்கு இருந்த தொடர்புகளையும் அறியக் கூடியதாக உள்ளது. அதுமட்டுமல்லாது பார்ப்பனர் அல்லாதார் இயக்கமான திராவிட இயக்கம், நீதிக்கட்சி போன்ற இயக்கங்களுடனும் மேற்குறிப்பிட்ட அருந்ததியர் இயக்கத் தலைவர்களின் தொடர்புகளையும், அதுனூடான செயல்பாடுகளையும் இந்நூலில் அறியும் வாய்ப்புகளுள்ளது.

மேற்குறிப்பிட்ட தலைவர்களின் அருந்ததிய சமூக மேம்பாட்டிற்கான வரலாறுகளை 1920ஆம் ஆண்டிலிருந்து 1949 ஆம் ஆண்டு வரையிலும் அறியக் கூடியதாக உள்ளதென்பதாகவும், 1958 ஆம் ஆண்டு வரையில் இடைப்பட்ட ஒன்பது ஆண்டுகளின் அருந்ததியர் இயக்ககங்கள் பற்றிய தகவல்கள், சான்றுகள் தமக்கு கிடைக்கவில்லை என்பதாகவும் இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

இந்நூலை வாசிக்கின்றபோது இலங்கையின் வடபகுதியில் நிலவிய சாதிய எதிர்ப்பு போராட்ட காலகட்டங்கள் எமது மனங்களில் அலை அலையாக கிழம்புகின்ற உணர்வுகளை நாம் தவிர்க்க முடியாது. இலங்கையின் தென்பகுதியில் அருந்ததியர் சமூக மேம்பாட்டிற்கான இயக்கங்களும் செயல்பட்டு வந்துள்ளதை எழில். இளங்கோவனின் இந்நூல் மூலாமாக அறிந்து கொள்வது எமது முதல் அனுபவம் என்றே கூறவேண்டும்.



பெரு.எழிலழகன்

1941 இல் கொழும்பில் அருந்ததியர் மகாஜன சங்கம் தோற்றம் பெறுகிறது. இச் சங்கத்தை நிறுவியவராக எம்.எம். இராஜகோபால் என்பவர் இருந்துள்ளார்.இவரின் அரசியல் பின்னணியானது இந்திய காங்கிரஸ் காட்சியினூடாகவே தோற்றம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது. அதன் தாக்கமே மது விலக்கு கொள்கையை அருந்ததியர் மகாஜன சங்கம் கடைப்பிடித்து வந்துள்ளதை புரிந்து கொள்ள முடிகிறது. கொழும்பில் வாழும் அருந்ததியர் சமூகத்தின வளர்ச்சியின்மைக்கு மது பழக்கம் மிக தடையாக இருப்பதை உணர்ந்த மேற்படி சங்கமானது அதற்கான போராட்டங்களை முன்னெடுத்துள்ளது. கள்ளுக் கடைகளுக்கு முன்பாகவும், அருந்ததியர் சமூகங்களை நேரில் சந்தித்தும் மது விலக்குப் பிரச்சாரங்களை மேற்கொண்டிருக்கிறார் அச்சங்க நிறுவனராகிய எம்.எம்.இராஜகோபால்.

இயக்க, அமைப்பு செயல்பாடுகளின் இயல்பு நிகழ்வான கருத்து முரண்பாடுகள், பிளவுகள் என்பன இலங்கையின் அருந்ததியர் மகாஜன சங்கத்துள்ளும் ஏற்படுகின்றது. அதன் விளைவாக அருந்ததியர் லீக், தமிழ்நாடு அருந்ததியர் ஊழிர் சங்கம் என்பதான பிளவுகளும் நிகழ்ந்துள்ளது. இந்நூலாசிரியரின் தந்தையான பெரு. எழிலழகன் 1940 இன் பிற்பாடு இலங்கையில் தமிழ் நாடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அருந்ததியர் ஊழிர் சங்கத்தின் செயல் பாட்டாளர்களில் ஒருவராக இருந்துள்ளார். தனது தந்தை மூலமாகவும் பல தகவல்களை உள்வாங்கியே நூலாசிரியர் இத்தொகுப்பை பூரணப் படுத்தியுள்ளார். தமிழ் நாடு அருந்ததியர் ஊழியர் சங்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான ஒ.ஆ.மா.சாமி எனும் மாடசாமி என்பவர் பெரியாரின் பகுத்தறிவுச் சுயமரியாதைக் கொள்கைகளை அருந்ததியர் சமூகங்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளார். இவர் இலங்கை வாழ் அருந்ததியர் தலைவர்களிலேயே வியக்கத்தக்க வகையில் பெரியாரை மட்டுமல்ல, பெர்னாட்சா, இன்சர்லால், வால்டேர், ரூசே, மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் போன்றவர்களைப் பற்றியும் அவர்களது எழுத்து, பேச்சுகளையும் மேற்கோள் காட்டி உரையாடும் ஆற்றல் மிக்கவராகவும் இருந்துள்ளார்.



பெ.கா.இளஞ்செழியன்

இச் சங்கத்தினர் சுயமரியாதை, கல்வி, மது ஒழிப்பு, சுயமரியாதைத் திருமணம், பார்ப்பனிய இந்துமத எதிர்ப்பு எனும் மேற்படி ஐந்து அம்சத் திட்டம் ஒன்றை உருவாக்கி செயல்பட்டிருக்கிறார்கள். கொழும்பில் இயங்கிய தமிழ்நாடு அருந்ததியர் ஊழிர் சங்கத்தின் செயல்பாடுகளை அறியும் போது இச்சமூகம் மீதான மேல்சாதிய ஒடுக்குமுறை எனும் நிகழ்வுகள் பதிவில்லாமலுள்ளது.

அருந்ததியர் சங்கங்களின் பிராதான செயல்பாடுகளென இந்துத்துவ வைதீக சடங்குகளுக்கு எதிராகவும், பகுத்தறிவு சுயமரியாதைச் செயல்பாடுகளை அருந்ததியர் சமூத்துள் விலியுறுத்தும் செயல்பாடுகளாயும் நிகழ்ந்த சம்பவங்களையே பெரும்பாலும் இந்நூல் பதிவு செய்துள்ளது. அந்தவகையில் தாலி மறுப்புத் திருமணங்கள், இந்துத்துவ மரணச் சடங்கு முறைகளை எதிர்த்தல், கல்வி வளர்ச்சி பெற இரவுப் பாடசாலைகளை அமைத்தல் போன்ற பண்பாட்டுக் கலாசார அம்சங்களில் மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சிகளிலேயே பிரதான கவனம் செலுத்தியுள்ளதை அறிய முடிகிறது.

மேலும் தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் அதன் போராட்டங்களிலும் ஈடுபட்டும் உள்ளனர். எஸ்.டி சேனநாயக்கா பிரதமராக இருந்த காலத்தில் இலங்கை அரசுக்குச் சொந்தமான எரிவாயு நிறுவன ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்களிலும் தமிழ் நாடு அருந்ததியர் ஊழியர் சங்கம் கலந்து கொண்டுள்ளது. இச்சங்கத்தின் தேவையும் அவசியமும் கருதி இலங்கை இடது சாரிக் கட்சியின் முன்னணித் தலைவர்களான லெஸ்லி. குணவர்த்தனா, இராபட். குணவர்த்தனா, பாலா தம்பு, எம்.ஜி. மென்டீஸ், கொல்வின். ஆர்.டி. சில்வா, பெர்னாட் சொய்சா போன்றோர் எரிவாயு ஊழியர் போராட்டத்திற்கு ஆதரவு கோரியுள்ளனர். எரிவாயு ஊழியர்களின் போராட்டத்தை ஒடுக்குவதற்காக அரசு மேற்கொண்ட கலவரத்தில் இலங்கை இடது சாரி முன்னணித் தலைவர்கள் பலருடன் தமிழ் நாடு அருந்ததியர் ஊழியர் சங்க உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டனர். அத்துடன் அக்கலவரத்தை அடக்க மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பலர் காயமடைந்ததுடன் சமசமாசிக் கட்சியின் முக்கிய உறுப்பினரான எட்வின் என்ற சலவைத் தொழிலாளி சுட்டுக் கொல்லப்பட்டார்.

வளர்ச்சிப்போக்கில் அருந்ததியர் சமூகங்களுக்கான இயக்கங்களாக மூன்று சங்கங்கள் செயல்பட்டுள்ளது. அருந்ததியர் லீக் இச்சங்கம் காந்திய வழியில் மக்களை அணுகியது. தமிழ் நாடு அருந்ததியர் ஊழியர் சங்கம் இது பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனையை வலியுறுத்தி வந்துள்ளது. சமத்துவ சமாஜம் எனும் இயக்கம் கம்யூனிசக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டு வந்துள்ளனர். மேற்படி மூன்று இயக்கங்களும் கலந்துரையாடிப் பேசியதன் பலனாக 1947 இல் அகில இலங்கை அருந்ததியர் சங்கம் எனும் பெயரில் ஐக்கியப்பட்டு செயலாற்றியும் வந்துள்ளனர்.

வட மாகாணத்தின் சாதிய போராட்டங்களையும் அதன் அனுபவங்களையும், விமர்சனங்களையும் பேணுபவர்களுக்கு எழில். இளங்கோவனின் இந் நூல் மிகவும் பயன் உள்ளதாக அமையும்.தமிழ் நாட்டில் அருந்ததியர் போராட்டத்தின் புதிய தகவல்ளும் இதுவரையில் அறியப்படாத போராட்ட முன்னணித் தலைவர்களின் தகவல்களும் அடங்கியுள்ளது. இந்நூல் இங்கு திட்டமிட்டு பரப்பப்பட்டு வரும் சில மாயைகளை அடித்துத் தகர்த்துள்ளது. தந்தை பொரியார் தலித் மக்களுக்கு எதிரானவர் என்றும், மார்க்சிய இயக்கங்கள் ஒடுக்கப்பட்ட இயக்கங்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்றும் உண்மைக்கு மாறான செய்திகள் இங்கு பரப்பப்படுகின்றன. அவற்றைத் தக்க ஆதாரங்களோடு தகர்த்தெறிந்துள்ள பெருமை இந்நூலுக்கு உண்டு" என்று தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர். சுப.வீரபாண்டியன்.



எச்.எம்.ஜெகநாதன்

www.tamilarangam.net


இந்நூலுக்கு மிக நீண்ட முன்னுரையை வழங்கிய அ.மார்க்ஸ் அவர்கள்.. இந்திய வம்சாவளியினருடனும் சிங்களவர்களுடனும் இயக்க அடிப்படையில் உறவுகள் இருந்தபோதும் யாழ்ப்பாணத் தமிழர்கள் இவர்களை பெரிதாக கண்டு கொண்டதில்லை. இலங்கையில் தாழ்த்தப்பட்டவர்களின் பிரச்சனைகளை முன்வைத்து இலக்கிய, இயக்க தளங்களில் இயங்கியவர்களும் கூட கொழும்பிலிருந்தும் அதைச் சுற்றியும் இயங்கிய அருந்ததியர்களின் பிரச்சனைகளைப் பொருட்படுத்தியதில்லை. கொழும்பிலுள்ள அருந்ததியச் சமூகத்திலிருந்து உதிர்ந்த சிறந்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான சரவணன் (அருந்ததியர்) அவர்களை நான் சந்தித்து எடுத்த நேர்காணல் ஒன்று சில ஆண்டுகளுக்கு முன் “தலித் முரசு இதழில் வெளியாகியது. அவர் சொன்ன விசயம் எனக்கு வியப்பளித்தது...” எனவும் அ.மார்க்ஸ் அவர்கள் தனது முன்னுரையில் விபரிக்கின்றார்.

தலித் சமூகங்கள் மீது அக்கறைகொண்டோருக்கு மிக பயனுள்ள வகையில் அமைந்த இந்நூலை எழுதியுள்ள தோழர் எழில். இளங்கோவிற்கு எமது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினராகிய எமக்கு இந்நூலைத் தந்துதவிய நண்பர் அ.மார்க்ஸ் அவர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

# கனடாவில் நடந்த நூல் வெளியீடு

**2008 செப்ரம்பர் 06 ஆம் திகதி கனடாவில் “எம்.சி.ஒரு சமூக விடுதலைப்போராளி”, “எண்ணக் கோலங்கள்” எனும் இரு நூல்களின் வெளியீடு நடைபெற்றுள்ளது. ‘எண்ணக் கோலங்கள்’ எனும் நூல் எஸ்.சந்திரபோஸ் அவர்களின் பல் வேறு படைப் பாற்றலுடன் வெளிவந்துள்ளது. இவ்வெளியீட்டில் கனடாவிலுள்ள பலர் கலந்து கொண்டதுடன் பல அறிஞர்களும் கருத்துரை வளங்கி சிறப்பித்தனர். மேற்படி நிகழ்வை திரு.க.நவம் அவர்கள் தலைமைதாங்கி சிறப்பித்தார்.**







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகுதி 2:

# ஒன்றா? இரண்டா.

-சோபாசக்தி-

## 1. சாதியப் பிரச்சினையை ஆய்வு செய்வதற்கு மார்க்ஸியத்தைக் காட்டிலும் சிறந்ததொரு பகுப்பாய்வு முறை உள்ளதா?

மார்க்ஸியம் குறிப்பான அய்ரோப்பிய சூழலிலேயே தோற்றம் பெற்றது. நிலவிய அய்ரோப்பிய சமூகச் சூழல்களுக்கேற்ப நமது மார்க்ஸியப் பேராசான்கள் வர்க்க முரண்களின் அடிப்படையிலேயே சமூக முரண்களைப் பகுப்பாய்வு செய்தார்கள். கார்ல் மார்க்ஸ் ஆசிய உற்பத்திமுறை - இந்திய சாதிய அமைப்புப் பற்றியெல்லாம் கவனம் கொண்டிருந்தார் என்றபோதிலும் கூடத் தொடர்புச் சாதனங்களும் உலகம் தழுவிய சமூகவியல் ஆய்வுகளுக்கு வசதி வாய்ப்புகளும் அருகியிருந்த அந்தப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அவரால் இந்திய - இலங்கைப் பகுதிகளுக்கே உரித்தான வர்ணாசிரப் படிநிலையில் அமைந்திருந்த சாதியக் கட்டுமானத்தை விரிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை என்றே சொல்லாலாம்.

மார்க்ஸ் - ஏங்கெல்ஸுக்குப் பிந்தியவர்களான லெனின் ட்ரொட்ஸ்கி போன்றவர்களும் சரி இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் மார்க்ஸியத்தின் போதாமைகளை உலகுக்கு அறிவித்தபடி மார்க்ஸியத்தின் தொடர்ச்சியாக இருத்தலியல் அமைப்புவாதம் போன்றவற்றைச் சிந்தித்த சர்த்தார் அல்துாஸர் போன்றவர்களும் சரி இலங்கை இந்தியாவுக்கே உரித்தான சாதியக் கட்டுமான சமூக அமைப்புமுறை குறித்துக் கவனம் செலுத்தினார்களில்லை. அது அவர்களுக்குச் சாத்தியமாயும் இருந்திராது.

ஆனால் இந்தச் சாதியச் சூழலில் இயங்கிக்கொண்டிருந்த நமது பொதுவுடமைக் கட்சிகளும் கம்யூனிஸ்ட் சிந்தனையாளர்களும் அய்ரோப்பிய சமூக அமைப்புக்கும் நமது சமுக அமைப்புக்கும் இடையேயான இந்தச் சாதியமைப்புக் குறித்த பாரிய வித்தியாசத்தைக் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும். ஆனால் இன்றுவரை நமது கட்சி சார்ந்த மார்க்ஸியர்கள் மார்க்ஸையும் லெனின் நூற் திரட்டுகளையும் உருப்போட்டுக்கொண்டிருக்கிறார்களே தவிர நமது சாதியச் சமூகத்தின் முதன்மை முரண்பாடான சாதிய முரணைக் கவனத்தில் எடுத்து அதனடிப்படையில் நமது மண்ணுக்கேற்ற மார்க்ஸியத்தைக் கட்டமைப்பது குறித்து சிந்தித்ததில்லை.

நமது சமூகத்தில் நிலவும் உற்பத்தி முறைமையை வர்க்க உற்பத்தி முறைமை எனச் சொல்வது எவ்வளவு துாரத்திற்குச் சரியாகும். உண்மையில் நமது சமூகத்தில் உற்பத்திமுறை சாதிய அடிப்படையிலேயே கட்டப்பட்டிருக்கிறது. இன்றுவரை சாதி சார்ந்த தொழில்கள் நடந்தவண்ணமே இருக்கின்றன. எடுத்துக்காட்டாக கள்ளிறக்கும் தொழிலும் துணி வெளுக்கும் தொழிலும் வர்க்க அடிப்படையில் நடக்கின்றனவா? அல்லது சாதிய அடிப்படையில் நடக்கின்றனவா? வர்க்க அடிப்படை என்றால் கள்ளிறக்கும் அல்லது துணி வெளுக்கும் ஒரு வெள்ளாளப் பாட்டாளி எங்கே? இங்கே வர்க்கம் சாதியாய்ப் பிரிந்து கிடக்கிறது.

நமது மார்க்ஸியர்கள் விளக்குவதுபோல வெறும் நிலப்புரபுத்துவத்தின் விளைவு மட்டுமல்ல சாதியம். சாதியின் அடிப்படை இந்துமதத்தில் இருக்கிறது. சாதியத்திற்கு தத்துவார்த்தப் பின்புலத்தை வழங்குவது இந்து வேதங்களும் புராணங்களும். சாதியப் படிநிலைகளுக்குரிய சட்டதிட்டங்களைத் தொகுத்து வழங்கியது மனு சாஸ்திரம். எனவே சாதியத்தின் மூலவேர் இந்துமதத்தில் இருக்கிறது. இந்துமதத்தை ஒழிக்காமல் அதன் சடங்கு சம்பிரதாயங்களை ஒழிக்காமல் சாதியத்தை ஒழிக்க முடியாது. இது குறித்தெல்லாம் நமது மார்க்ஸியர்கள் பேசுவதேயில்லை. கா. சிவத்தம்பி போன்ற மார்க்ஸிய மூதறிஞர்களெல்லாம் கும்பிளாவிளைப் பிள்ளையார் கோயில் கும்பாம்பிஷேக மலருக்குக் கட்டுரை எழுதிக் கொடுக்கும் கொடுமையெல்லாம் இங்கே நடந்திருக்கிறது.

நான் இப்படியெல்லாம் சொல்வது தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில் கொம்யூனிஸ்டுகளின் வீறார்ந்த தலைமைப் பாத்திரத்தை மறுப்பதாகாது. சாதியக் கொடுமைகளுக்கு எதிரான களப்போராட்டங்களில் அவர்களின் வீரஞ் செறிந்த போராட்டம் குறித்தும் அர்ப்பணிப்புக் குறித்தும் நமக்கு ஐயங்கள் ஏதுமில்லை. ஆனால் தேசிய இனப்பிரச்சினை - பாட்டாளி வர்க்க அரசியல் முன்னெடுப்பு - கலை இலக்கியக் கோட்பாடுகள் என எல்லாப் பக்கங்களிலும் தத்துவார்த்தரீதியாக நமது மார்க்ஸியர்கள் சொதப்பி வைத்திருப்பது போலவே சாதியம் அதன் தோற்றம் அதன் இயங்குதிசை போன்றவை குறித்தும் நமது மார்க்ஸியர்கள் அடிப்படைப் புரிதலே இல்லாமலிருக்கிறார்கள்.

நாற்பதுகளிலேயே சிறுபான்மைத் தமிழர் மகாசபை தாழ்த்தப்பட்டவர்களுக்கு கல்வியிலும் வேலையிலும் தனி ஒதுக்கீடுகளைக் கோருகிறார்கள். அறுபதுகளில் ஒரு தனிமனிதனாக அய்யா வைரமுத்து பவுத்த சங்கத்தைத் தொடங்கி இந்துமத எதிர்ப்பைப் பேசினார். சாதியற்ற பவுத்தத்தைத் தலித்துகளுக்கான மதமாக முன்னிறுத்துகிறார். சாதியக் கட்டுமானத்தில் விரிசல்களை ஏற்படுத்தக் கூடிய இத்தகைய போராட்டங்களையும் கலகச் செயற்பாடுகளையும் நமது கட்சிசார்ந்த இடதுசாரிகள் ஒருபோதும் அங்கீகரித்தார்களில்லை.

நமக்கு இந்துத்துவமும் முதலாளியமும் இரட்டை எதிரிகள் என்பார் அண்ணல் அம்பேத்கர். இது குறித்து நமது கொம்யூனிஸ்டுகள் இனிவரும் காலங்களிலாவது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

www.tamilarangam.net

### 2. அம்பேத்கார் பெரியார் போன்றவர்களின் இந்தியச் சமூகப்புலம் சார்ந்த சிந்தனைகளை ஈழச் சமூகப் புலத்தில் பொருத்த முயல்வது சரியா?

இந்துத்துவம் குறித்தும் அது தோற்றுவித்த சாதிய முறைமை குறித்தும் பாபா சாகேப் அம்பேத்கரை விட ஆழமாக ஆய்வு செய்தவர்களும் அம்பலப்படுத்தியவர்களும் எவருமில்லை. அண்ணலின் எழுத்துகள் சுமார் ஒரு இலட்சம் பக்கங்களில் விரிந்து கிடக்கின்றன. இந்துமதத்தைத் துறந்து பத்து இலட்சம் தலித் மக்களோடு பவுத்தத்தை தழுவியவர் அவர். சாதியமுறைமை மற்றும் இந்து மதம் ஆகியவற்றைத் தத்வார்த்தப் புலத்தில் புரிந்துகொள்ள முயலும் ஒருவருக்கு அம்பேத்கரைக் காட்டிலும் சிறந்த ஆசான் வேறொருவரில்லை. இந்த வேறொருவருக்குள் கார்ல் மார்க்ஸ் காந்தியார் கார்திகேசன் மாஸ்டர் போன்றவர்களிலிருந்து இன்றைய ரோமிலா தர்பர் சி.கா. செந்திவேல்வரை அடங்குவார்கள் என்று நம்மால் அடித்துக் கூற முடியும்.

தந்தை பெரியார் கல்விப்புலம் சார்ந்த சிந்தனையாளர் கிடையாது. அவர் கலகக்காரர். களச் செயற்பாட்டாளர். தனது உள்ளத்தில் தோன்றுபவற்றை ஒளிவு மறைவில்லாமல் சொல்லிவந்த துணிச்சல்காரர் நமது கடவுள் சாதி காப்பாற்றும் கடவுள் நமது மொழி சாதி காப்பாற்றும் மொழி நமது அரசாங்கம் சாதி காப்பாற்றும் அரசாங்கம் என்று கலகக் குரலை ஒலித்தவர் அவர்.

கடவுள் தேசாபிமானம் கற்பு காதல் மொழி இலக்கியம் இதிகாசம் என்று எல்லாவிதக் கட்டமைக்கப்பட்ட புனிதங்களையும் உடைத்து நொறுக்கியவர் பெரியார். அவரளவுக்கு இவை குறித்துச் பரந்தளவில் சிந்ததித்தவரும் செயற்பட்டவருமான ஒருவர் இந்தியத் துணைக்கண்டத்திலேயே எவரும் கிடையாது. ஜெர்மனிய மார்க்ஸிடமும் சீனாவின் மாவோவிடமும் நாம் கற்றுக்கொள்ள எவ்வளவோ இருக்கும்போது பெரியாரிடமிருந்து மட்டும் நாம் கற்றுக்கொள்ள ஏதுமில்லையா?

அம்பேத்கார் பெரியார் என்ற இருபெரும் ஆளுமைகளை ஈழத்தில் பொதுவுடமை இயக்கங்கள் தேசிய விடுதலை இயக்கங்கள் கலை இலக்கியவாதிகள் நிராகரித்தே வந்திருக்கிறார்கள். முதலில் அம்பேத்கார் இந்திய அரசியல் சாசனத்தை வரைந்த முதலாளியவாதி பெரியார் வெறும் பார்ப்பன எதிர்ப்பாளர் என முனகுவார்கள். சாகும்வரை தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவே உழைத்து இந்தியத் துணைக்கண்டத்தில் சாதியத்துக்கு எதிரான விழிப்புணர்வை மூட்டிய அம்பேத்காரா முதலாளியவாதி? அம்பேத்கார் அரசியல் சாசனத்தில் கைவைத்ததால் தான் தலித்துகளுக்கு இன்றிருக்கும் அற்ப சொற்ப உரிமையாவது இந்திய அரசியல் சாசனத்தில் உறுதி செய்யப்பட்டது என்றும் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை முதலில் தமிழில் வெளியிட்டவரே பெரியார் தானென்று தொடங்கி பெரியார் சிந்தனைகளின் வீச்சுகள் குறித்துப் பொறுப்பாக விளக்கத் தொடங்கினால் ஏலாக்கட்டத்தில் அவர்கள் இந்தியச் சாதிய அமைப்பு வேறு இலங்கைச் சாதிய அமைப்பு வேறு என்று விவாதத்தை முடித்துக்கொள்கிறார்கள்.

இந்தியச் சாதிய அமைப்புக்கும் இலங்கைச் சாதியமைப்புக்கும் இடையேயுள்ள எளிமையான வித்தியாசங்களைச் சுட்டிக்காட்டி அம்பேத்கரையும் பெரியாரையும் கடைசியில் சற்றிவளைத்துத் தலித் அரசியலையும் நிராகரிப்பதுபோல அயோக்கியத்தனம் எதுவுமில்லை.

இந்தியாவிலேயே சாதியமைப்பு முறையில் தமிழகத்துக்கும் மகாராட்டிடத்துக்குமிடையே சில வித்தியாசங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவ்வளவு ஏன் தமிழகத்திலேயே வட்டாரவாரிய வித்தியாசங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஏன் யாழ்ப்பாணச் சாதியமைப்பு முறைக்கும் மட்டக்களப்புச் சாதிய அமைப்பு முறைக்குமிடையில் வித்தியாசங்களுள்ளன. ஆனால் சாதியத்தின் அடிப்படைப் பண்புகள் பொதுவானவைதான். அந்தப் பண்புகள் இந்துமதத்திலிருந்து உற்பத்தியானவைதான். சாதியமே இந்தியாவிலிருந்து ஈழத்துக்கு இறக்குமதியான ஒன்றுதானே. நமது திருமணம் மரணவீடு முதலிய சடங்குகள் ஆலய வழிபாடுகள் போன்ற சாதியக் கலாசாரங்கள் அனைத்துமே இந்தியாவிலிருந்து இறக்குமதியானவைதானே. குறிப்பாக ஆரியர்களிடமிருந்து நமக்குச் சேர்ந்த கசடுகள்தானே இவை. சாதி என்ற வார்த்தையே வடமொழிதானே.

ஆக இந்தியாவிலிருந்து ஒட்டுமொத்தமாகக் கட்டியிறக்கப்பட்ட சாதியக் கட்டமைப்பு ஈழத்துச் சூழலில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில வேறுபாடுகளைக் கொண்டிருக்கலாம். அங்கே பார்ப்பான் ஆதிக்க சாதி என்றால் இங்கே வெள்ளாளன் ஆதிக்கசாதி. பேர் மட்டும்தானே வேறேயொழிய தீண்டாமையும் ஆதிக்கப் பண்புகள் இருவருக்கும் ஒருபடித்தானவைதான். ஆகச் சாதியம் இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பரவியது போல சாதியெதிர்ப்புச் சிந்தனைகளும் அவற்றின் மூலவர்களான அம்பேத்கரும் பெரியாரும் ஈழத்துக்கு எடுத்துவரப்படுவது தவிர்க்க முடியாதது. அதுதானே தருக்கமும்.

### 3. இந்தியாவில் பாடசாலைகளில் சேர்க்கும்போதோ வேலையில் சேர்க்கும்போதோ சாதிச் சான்றிதழ் கேட்கிறார்கள். நடிகர் கமல்ஹாஸன் கூட சாதியைக் கேட்காத பள்ளிக்கூடத்தில்தான் என் குழந்தைகளைச் சேர்ப்பேன் என முன்பொருமுறை சொல்லியிருக்கிறார். பள்ளிக்கூடத்தியிலேயே சாதியைக் கேட்குமளவிற்கு ஈழத்தில் நிலமை மோசமாயிருக்கவில்லையே?

இந்தக் கேள்வியை ஊருப்பட்ட வெள்ளாளர்கள் பல இணையத்தளங்களில் எழுப்பியிருக்கிறார்கள். இலங்கையிலும் பாடசாலையில் சேர்க்கும்போதும் அரசாங்க வேலையில் சேர்க்கும்போதும் சாதியைக் கேட்டுச் சேர்க்கும் காலம் வரவேண்டும் என்பதானே நமது இலட்சியமாகவேயிருக்கிறது.

முதலில் இந்தக் கேள்வியை எழுப்புகிறவர்களுக்கு இடஒதுக்கீடு குறித்தோ மண்டல் கமிஷன் குறித்தோ இந்தியாவில் நடந்த சமூகநீதிப் போராட்டங்கள் குறித்தோ ஏதும் தெரியாது எனத் தெரிகிறது.

தொடர்ச்சி....12ம் பக்கம்

www.tamilarangam.net

# தீண்டாமைக் கொடுமைகளும் தீண்ட நாட்களும்

-தோழர் யோகரெட்ணம்-



## நினைவுக்குறிப்புகள்– 07

திரு வைரமுத்து (ஐயாத்துரை மாஸ்ரர்) அவர்கள் அகில இலங்கைத் தமிழ் பௌத்த காங்கிரஸ் என்ற அமைப்பை அஸ்கிரி - மல்வத்த பீடாதிபதிகளின் ஆசியுடன் தொடங்கினார். திரு வைரமுத்துவிற்கு திரு ரட்டாய் (காரைநகர்), திரு கந்தையா மாஸ்ரர் (தெல்லிப்பளை இவர் யாழ் தெங்குப்-பனம் பொருள் அபிவிருத்தி சபை தலைவர்) போன்றவர்களோடு மற்றும் பல முக்கியஸ்தர்களும் பக்க துணையாக செயல்பட்டனர். சாதிக்கொடுமையிலிருந்து விடுபடவும், கல்வி பொருளாதார வளர்ச்சிகளுடன் தலித் சமூகம் சிங்கள மொழி அறிவு பெறவும் ஒரே வழி பௌத்தர்கள் ஆவதே என்றும் அவாகள் பிரச்சாரம் செய்தனர்.

பாடசாலை மாணவனாக இருந்த நான் மணிமாமாவின் வழிகாட்டலால் பௌத்த மதத்தில் சேர முடிவுசெய்தேன். அதற்கு எனது பெற்றோர் சம்மதமும் கிடைத்தது. அத்துடன் எனது அக்கா சீனா சென்றேனும் சீர்கல்வி தேடு, சிங்களம் படித்து நீ சிறப்பாக வாழவேண்டும். என எனக்கு நல்லுரை கூறி அனுமதி தந்தார். நான் மானிப்பாய் சென்று திரு.வைரமுத்து அவர்களிடம் எனது விருப்பத்தை தெரிவித்தேன்.

மறுநாள் காலை திரு.வைரமுத்து அவர்களும் திரு ரட்டாய் அவர்களும் எனது வீட்டுக்கு வந்து எனது பெற்றோரின் சம்மதமும் பெற்றனர். எங்களது தெற்கு நோக்கிய பயணத்துக்கான திகதியும் குறிப்பிடப்பட்டது. சகல தமிழ்ப் பத்திரிகைகளும் 100 தமிழ் இளைஞர்கள் பௌத்தமதம் தழுவி தெற்குப்பயணம் என்று பெட்டிச் செய்தியாக வெளியிட்டனர். அச்செய்தியை தமிழ்ப் பத்திரிகைகள் ஒரு மூலைக்குள் சுருக்கினாலும் இச்சம்பவமானது யாழ் குடாநாட்டை ஓர் உலுக்கு உலுக்கியதென்வோ உண்மைதான். தமிழ் அரசியல் தலைமைகள் மண்டையைச் சொறிந்தனர். பாராளுமன்றத்தில் தமிழ் தலைமைகளிடம் கேள்விக் கணைகள் வீசப்பட்டது. குறிப்பாக கம்பஹா பாராளுமன்ற உறுப்பினர் தோழர் எஸ்.டி.பண்டாரநாயக்கா இவர் யாழ்ப்பாண சாதிய அடக்குமுறைகளை நன்கு அறிந்துகொண்ட ஒருவர். நி ச்சாமத்து அவலங்களை நேரிலும் பார்த்தவர். அவரும் தமிழ் அரசியல் தலைமைகளிடம் தமிழர்களின் பௌத்த மத மாற்றம் பற்றிய நிலைபற்றி வினாவினார்.. அதற்கு வட்டுக்கோட்டை தொகுதி (சங்கானை அடங்கலாக) பாராளுமன்ற உறுப்பினரான திரு.அ.அமிர்தலிங்கம் அவர்கள் அங்க நடக்கிறது சின்ன வயட்நாம் யுத்தம் - ஏனென்றால் இதற்கெல்லாம் காரணம் சீன கொம்னிஸ்ட் கட்சிக்காரர்கள் எனப் பதில் கூறி நழுவினார்.

தலித் இளைஞர்கள் பௌத்த மதம் மாறுவதற்கான சூழலும் அவசியமும் ஏற்படக் காரணமாக இருந்தவர்கள் அன்றைய தமிழ் அரசியல் தலைமைகளேயாகும். அவர்களின் சாதிய மேலாதிக்க அணுகுமுறைகளின் சில துளிகளை இங்கு நினைவுறுத்தத் தோன்றுகிறது.

35 லட்சம் தமிழர்களின் ஏகதலைவர், தமிழரின் உரிமைக்காக சத்தியாக்கிரக வழியில் அறப்போர் புரிந்ததினால் அவர் ஈழத்துக் காந்தி!! என்றெல்லாம் போற்றிப் புகழப்பட்வர் திரு. எஸ். ஜே.வி.செல்வநாயகம் அவர்கள். மாவிட்டபுர கந்தசாமி கோயில் பிரவேசப் போராட்டத்தின்போது அக்கோயில் பூசாரியான துரைச்சாமி குருக்கள் போன்றோரின் பக்கம் சார்ந்தும், தம் வர்க்க நலன் சார்ந்தும் செயல்பட்டவர் இந்த தானைத் தலைவர் செல்வநாயகம். கோயில் விவகாரம் பற்றி இவரிடம் கேட்கப்பட்டபோது ஒரு கிறிஸ்தவனாக நான் இருப்பதால் இந்துக் கோயில் விவகாரங்களில் நான் தலையிட முடியாது என்றார். செல்வநாயகத்தின் தொகுதி காங்கேசன்துறை இங்குதான் மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலும் இருக்கின்றது. திரு.அமிர்தலிங்கம் கூறிய பதில் அதைவிட வேடிக்கையானது அது சின்ன வியட்நாம் போர் அது பள்ளர் என்ற சமூகத்தவர்க்கும், கோவியர் என்ற சமூகத்தவர்களுக்குமிடையே ஆன போர் என்றும் கூறியதுடன், இது சீன கம்யுனிஸ்டுக்களின் வேலை என்றும் பாராளுமன்றத்தில் கூறினார். ஆதாரம் பாராளுமன்ற பதிவு ஏடு (கன்சாட்-1967.)

அடுத்து வவுனியா திரு.சி.சுந்தரலிங்கம் என்பவர். கல்விமான், அடங்காத் தமிழன், தனிநாடு கேட்ட தலைவர், லண்டன் மகாராணிக்கு கணக்கு சொல்லிக் கொடுத்தவர் என்றெல்லாம் இவருக்கு பெருமையுண்டு. இவர்தான் மாவிட்டபுர

www.tamilarangam.net

வாசலில் நின்று தன் காடையர்களுடன் சேர்ந்து கோயிலுக்குள் தலித்துக்கள் பிரவேசிக்கக் கூடாதென மிக மூர்க்கமாக தடுத்தவர். கோயிலுக்குள் பக்தர் தம் கடமையைச் செய்யவிடாது தடுத்த குற்றத்துக்கு மல்லாகம் நீதிமன்றம் சட்ட மேதை சி.சுந்தரலிங்கத்துக்கு 50ரூபா அபராதம் விதித்தது. இந்த அபராதத்தை கட்ட மறுத்து லண்டன் சென்று பிரிவு கவுன்சிலில் மேல்முறையீடு செய்தவர். இருந்தபோதும் மல்லாகம் நீதிபதியின் தீர்ப்பு சரியானது என்பதாகவே பிரிவுகவுன்ஸிலும் தீர்ப்பளித்தது. கல்விமானெனவும், அடங்காத் தமிழனெனவும் கொண்டாடப்பட்ட ஒருவரின் சாதிய மேலாதிக்க ஒடுக்குமுறையை இன்றைய புதிய சந்ததியினர் அறிந்து கொள்ளவேண்டும்.

சாவகச்சேரியில் நடந்த ஒரு சம்பவம்: அங்கு வண்டில் சவாரிப் போட்டி நடைபெற்றது. வெற்றி பெறுபவருக்கு பரிசளித்து கௌரவிக்க வந்தவர் உதவி மந்திரி குமாரசுவாமி அவர்கள். குமாரசுவாமியோ ஒரு தடித்த சாதி வெறியர். வண்டில் சவாரியில் வென்றதோ ஒரு தலித்தின் மாட்டுவண்டி. உதவி அமைச்சர் தன் சாதி வெறியை எப்படி பிரயோகித்தார் என்றால்... ஓடி வென்றது மாடுதானே! எனவே மாட்டுக்கு மரியாதை செய்வதுதான் முறையானது எனக்கூறி மாட்டுவண்டி சொந்தக்காரனின் கழுத்தை தீண்டாமல்! சவாரி மாட்டின் கழுத்தில் மாலையை அணிவித்து தன் தீண்டாப்பெருமையைக் காப்பாற்றிக் கொண்டார்.

தென்மராட்சித் தொகுதியிலுள்ள மீசாலை எனும் ஊரிலுள்ள பாடசாலைக்கு தலித் சிறுவர் சிறுமியர் கல்வி கற்க சென்றார்கள். அதனை பொறுக்க முடியாத சாதிவெறியர்கள் அப்பிள்ளைகளின் பாடப் புத்தகங்களை பறித்து தீயிட்டதுடன், அச்சிறுவர் சிறுமிகளை அடித்துத் துன்புறுத்தியும், அவர்களை தம் வீட்டில் மாட்டு சாணம் அள்ளவும், வீடுவாசல் பெருக்கவும் கட்டளையிட்ட கொடுமையை என்னவென்றுரைப்பது?

பாடசாலை செல்லமுடியாது, சில பாடசாலைகளுக்கு சென்றாலும் வகுப்பில் பின்வரிசையே ஒதுக்கப்பட்டது. கோயிலுக்குள் சென்று வழிபட முடியாது, தேனீர்கடைகளில், சலூன்களில் என எங்கும் தலித்துக்கள் மீதான சமூக பொருளாதார ஒடுக்குமுறைகள் மேலோங்கிய காலகட்டம். இவ்வாறான கொடுமையை எதிர்க்கவும் அதிலிருந்து விடுபடவும் ஒரே பாதை பௌத்தர்கள் ஆவதே என்ற முடிவால் குறிப்பிட்ட திகதி 100 தலித் மாணவ இளைஞர்கள் கோண்டாவில் புகையிரத நிலையம் சென்றோம்.

எனது முதல் ரயில் பயணம் மட்டுமல்ல முதல் தெற்குக்கான பயணமாகவும் அது அமைந்தது. இரவு மெயில் ரெயிலின் ஒரு பெட்டி முழுவதும் நாங்கள் தான். திரு.ரட்டாய், திரு.கந்தையா போன்றவர்களும் எம்முடன் கூட வந்தனர். மறுநாள் காலை 7 மணி அளவில் நாம் கொழும்பு மத்திய புகையிரத நிலையம் சென்றடைந்தோம். அங்கு எமக்கு பௌத்த துறவிகளினால் வரவேற்பளிக்கப்பட்டது. காலை உணவை முடித்துக்கொண்டு காலிக்கு கரிக்கோச்சி மூலம் பயணத்தைத் தொடர்ந்தோம். கொழும்பில் இருந்து வைரமுத்து அவர்கள் எம்முடன் இணைந்து பயணம் செய்தார். மாலை காலியை வந்தடைந்தோம். காலியிலும் மிகவும் சிறப்பாக எம்மை வரவேற்றனர். காலியின் நகர மையத்தில் அமைந்துள்ள புத்த விகாரையில் நாம் சிலமணி நேரம் தங்கினோம். அங்குள்ள பெரிய மண்டபத்தில் நாமனைவரும் சென்று ஆசனத்தில் அமர்ந்து கொண்டு நடக்கும் நிகழ்வுகளை கவனித்தோம். ஒவ்வொரு பெரிய விகாரையின் விகாராதிபதிகளை யும் எமக்கு அறிமுகப்படுத்தினார்கள்.

அதன் பின் ஒவ்வொரு பகுதிக்குரிய விகாரதிபதிகளால் எமது வசதிக்கேற்ப 5பேர் 10 பேர் என்று வெவ்வேறு இடங்களுக்கு தெரிவாகினோம். என்னையும் திரு ரவிராஜ் (இவர் அ.இ.பொ.ச. தலைவரின் மகன்) புலேந்திரன் (பிரான்சில் வசிப்பவர்) குணச்சந்திரன் (பிரான்சில் வசிப்பவர்), மனோகரன் (கே.கே.எஸ்), தெய்வேந்திரம் (ஜேர்மனியில் வசிக்கறார்) ஆகியோரையும் காலியில் உள்ள பத்தேகம ஸ்ரீ ரத்னசார யுனிவெஸ்ரி பிரிவென வின் அதிபரான பண்டிற் கனேகம சரணங்கர தேரர் அவர்கள் தம்முடன் சேர்த்துக் கொண்டார். அவரின் காரில் காலியிலிருந்து பத்தேகம நோக்கி நாம் பயணம் செய்தோம். பத்தேகமவில் உள்ள சந்திரவல என்ற அழகிய மலைக் குன்றுகள் சார்ந்த ஓர் கிராமத்திற்கு வந்து சேர்ந்தோம். சுற்றிவர றப்பர், கறுவா தோட்டங்களுடன், ரம்புட்டான், லாவலு, ஈரப்பலா, வாழை போன்ற மரங்கள் அடர்ந்த பசுமையான கண்கவரும் ஓர் கிராமம் அது.. மேகம் தூவும் துளிகளையும் சேர்த்திழுத்து ஓடுகின்ற அருவிகள் பார்ப்பதற்கு ஓர் பாம்பு போல் சுற்றி வளைந்து திரியும். இந்தக் காட்சிகளுக்கு மத்தியில் அமைந்துள்ள ஓர் மலையில்தான் விகாரை இருந்தது. அங்குதான் எமது தங்குமிடமும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. தரையிலிருந்து விகாரை உச்சியை நாம் எட்டுவதற்கு 400 க்கு மேற்பட்ட படிகளை தாண்ட வேண்டும். எமக்கான படுக்கை அறை ஏனைய வசதிகள் அனைத்தும் அங்கு தரப்பட்டது. சாப்பிடும் போதும் தேரர்களுடன் ஒன்றாக அருகிலமர்ந்தே சாப்பிடுவோம். எதுவித குறையுமில்லை. எமது பாடசாலையான ஸ்ரீ.ரத்னசார யுனிவெஸ்ரி பிரிவென விற்கு செல்வதற்கு விகாரையிலிருந்து கீழ் இறங்கி சிறிது தூரம் நடக்க வேண்டும். அதில் இளம் பௌத்த தேரர்களும், சாதாரண சிங்கள மாணவர்களும் கல்வி கற்று வந்தனர். மிகப்பெரிய பாடசாலை. ஆரம்பத்தில் எனக்கு வியப்பாகத்தான் இருந்தது. ஒருவகையான மனப்பயமும் கூட. பழகப் பழக ஊரின் நினைவுகளெல்லாம் தொலைந்துபோய் மிகவும் சந்தோசமாக காலம் நகரத் தொடங்கியது.

நாங்கள் ஐவரும்தான் ஒன்றாக பாடசாலை போவோம். எமக்கு சிங்கள மொழியில் அரிச்சுவடியிலிருந்து பாடம் ஆரம்பமானது. எமது முதல் சிங்கள ஆசிரியை செல்வி வந்துறம்ப வன்னியாராச்சி. மிகவும் அன்பாகவும், பண்பாகவும், விளக்கமாகவும் கற்பிக்கும் திறமை கொண்டவர். நாம் மிக சந்தோசத்துடனும், குதூகலத்துடனும் சிங்கள மொழி கற்கத் தொடங்கினோம்.

எமது ஐவருக்கு மட்டுமேயான தனிவகுப்பு ஒழுங்கு செய்து தரப்பட்டது. காலை 8.30 மணியிலிருந்து 12.15 மணிவரையும், பின்னர் மதியம் 13.30 முதல் 15.30 வரை வகுப்பு நடக்கும். மாலை 6.30 மணிக்கு பத்தேகம பத்தியதேரர் பாடம் சொல்லித்தருவார். 7.30 மணிக்கு சாப்பிட்டதும் நாங்கள் எங்களின் அறைக்கு வந்துவிடுவோம். எமது வயதொத்த இளம் தேரர்கள் எம்முடன் மிகவும் நெருக்கமாகவும், சகஜமாகவும் பழகுவார்கள். சனி-ஞாயிறு விடுமுறையில் நாம் சினிமாபார்ப்போம். அல்லது அயல்கிராமங்களுக்கு செல்வோம். வந்துறம்ப, கீம்பிஜெல, போத்தலபத்தேகம இப்படி விரும்பிய கிராமங்களுக்கு செல்வோம். எமக்கு தேவையான பணம் சுவாமி அவர்கள் தருவார்கள். உதவிக்கு சிங்கள சகோதரர் பிரேம்லால் அனேகமாக எம்முடன் வந்து சேர்ந்து விடுவார். அவருக்கு வெளியில் திரிவது, இடம் பார்ப்பது முசுப்பாத்தி என்றால் நல்ல விருப்பம்.

நானும் ஏனைய நண்பர்களும் முதல் முறையாக கறுப்பு வெள்ளை சினிமாவான பாரா வலு எனும் சிங்களப் படம் பார்த்தோம். அதில் கதாநாயகனாக நடித்தவர் ரோணிரண சிங்கா என்பது எனது நினைவில் இன்றும் அழியாது இருக்கின்றது. பத்தேகம விற்கு வந்த நாம் ஐவரும் சிங்கள மொழியை மெல்ல மெல்ல எழுத-வாசிக்கவும் தொடங்கிவிட்டோம். என்னைப் பொறுத்தவரை தப்புத் தப்பாகவேனும் வெட்கம் கூச்சமின்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சிங்களம் கதைக்கவும் தொடங்கிவிட்டேன். எமது ரீச்சர் சிரிச்சு சிரிச்சு நான் பேசும் மழலைச் சிங்களத்தை ரசிப்பா. கமக்னா, கமக்னா ஏம தமாய் கத்தாக்கரண்ட புலுவாங் (பரவாயில்லை இப்படி இப்படித்தான் கதைக்க முடியும்) என்று சொல்லுவா.
நாட்கள் வீச்சாக நகர்ந்து வருடம் ஒன்றாகியது நான் சிங்களம் ஓரளவிற்கு பேசவும், எழுதவும், வாசிக்கவும் கற்றுக்கொண்டேன். மலை உச்சியிலுள்ள ஓர் புத்தவிகாரையில் தான் நாம் பௌத்த போதனை பெறசெல்வோம். மாபிள் கற்களால் கட்டப்பட்ட மிக அழகான விகாரை அது. அந்த விகாரைக்கு போகும் வழியில் விஸ்ணு தேவியோ வுக்கும் சிறு கோவில் இருந்தது. பத்தேகம சமித்தி தேரர் தான் எமக்கு பௌத்த மத போதனைக்கான குருவாக இருந்தார்.

நமோ தஸ்ஸ பகவதே
சம்மா சம் புத்தஸ்ஸ
புத்தம்.. சரணம்...கச்சாமி
தம்மம்...சரணம்...கச்சாமி
பாணதி பாத வேதா மணி சிக்கா
பதம் சமாதியம் நமோ தஸ்ஸ..


என்ற பாடலை நாம் மனப் பாடம் செய்வதற்கு பல நாட்கள் சென்றன தேரரோ மிகவும் சாதுவானவர். எமக்கு புரியும்படியாக பல தடவைகள் பாடிக் காட்டுவார்.

தொடரும்...

**''...ஜீ.ஜீ.பொன்னம்பலம் முதலானோர் இலங்கை வாழ் தமிழர்களுள் பெரும்பான்மையினராக வாழ்ந்த இந்திய வம்சாவழித் தமிழர்களுடைய பிராசாவுரிமையை பறித்த செயலும் இந்த அதிகாரவெறியின் பாற்படும். காடு சுடும் என்று நாடாளுமன்றத்தில் சவடால் பேசிய அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் , மாவைக் கந்தனைச் சிறுபான்மைத் தமிழனை தரிசிக்கலாகாது என்று சண்டித்தனம் செய்ததும் யாழ்ப்பாண வேளாளர்களின் ஆதிக்க வெறியின் பாற்படும். இந்த ஆதிக்க வெறியின் எதிர்வினையே 1983 ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்ட ஈழத்தமிழர் சங்காரம். இந்த உண்மையை இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் பலர் மறந்து, "தீக்கோழி" சாகசம் புரிதல் அவலக்கோலமே.''**

**('எம்.சி ஒரு சமூகவிடுதலைப் போராளி' எனும் நூலிற்காக எஸ்.பொ அவர்கள் எழுதிய முன்னுரையின் சிறு பகுதி)**

# எனது நினைவலைகளில் கே.டானியல்.



**எம்.சி.சுப்பிரமணியம்.**

சிறுகதைகளுக்கும் நாவல்களுக்கும் தலையங்கம் எழுதிய ஒரு ஆற்றல் மிக்க படைப்பாளி எனது கட்டுரைக்கே தலைப்பாகிவிட்டதனை நினைக்கும்போது நெஞ்சு துடிக்கின்றது. கரையோரத்துப் பாறையாக உறைந்துவிட்ட எனது உள்ளம் ஓங்கியடிக்கும் நினைவலைகளினால் உருகுகின்றது.

நான் நினக்கிறேன் அது ஆயிரத்தித் தொள்ளாயிரத்து நாற்பத்தி ஏழுஎன்று. அப்பொழுது நான் மிக முனைப்புடன் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருந்த காலம். எங்கள் கட்சியில் அப்பொழுதுதான் துடிப்புமிக்க அம்மூன்று இளைஞர்களும் சேர்ந்து கொள்ள வந்தனர். அவர்கள் கே. டானியல். டொமினிக் ஜீவா. சண்முகம் இராசையா ஆகியோர் ஆவர். இவர்களை எமது கட்சியில் இணைத்துக் கொள்வதில் என்னுடன் சேர்ந்து அமரர் மு.கார்த்திகேசன். ஆர்.ஆர்.பூபாலசிங்கம் ஆகியோரும் உதவினர். இம்மூவரும் வீறுகொண்ட வேங்கைகள். தமது நாட்டை, மொழியை, பண்பாட்டை நேசித்தவர்கள். அதேவேளையில் உலகளாவிய மானிட நேயம் கொண்டு மற்றவர் திறமைக்கு மதிப்பளித்தனர். அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தனர். சாதி ஒடுக்குமுறைக்கும், நசுக்குதல்களுக்கும் எதிராக போர்க்கொடி ஏந்தினர். சாதி அநீதி ஒழியட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும் என்றும், இல்லாமை இல்லாமல் போகட்டும், எல்லோரும் எல்லாமே பெறுதல் வேண்டும் எனவும் குரல் கொடுத்தனர். அப்படிக் குரல் கொடுத்த ஒலி ஒன்று இன்று ஓய்ந்துவிட்டது. அமைதிகொண்டு உறங்கிவிட்டது, ஆம்: அதுதான் கே.டானியலின் குரல்.

அண்மையில் தமிழ்நாட்டில், தஞ்சாவூரில் என் நெஞ்சிற்கினிய நண்பன் கே. டானியல் அமரரானார் என்னும் செய்தி எனக்கு மிகுந்த கவலையைத்தந்தது. என்னைவிட வயதில் இளையவன். இன்னமும் எத்தனையோ சமூகப்பணியும் இலக்கியப்பணியும் ஆற்ற வேண்டியவன் அமரனாகிவிட்டானே என எண்ணும்போது நெஞ்சம் குமுறுகின்றது.

சாதாரண குடும்பத்தில் ஓர் தொழிலாளியாக தன் வாழ்வினை ஆரம்பித்த கே. டானியல் பாமரர் முதல் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் வரை தனது எழுத்தால், பேச்சால், செயலால் கவர்ந்தான். இலங்கை, இந்தியப் பத்திரிகைகளில் இவன் கதைகள், கட்டுரைகள் வெளிவந்தன. இலங்கையின் சாகித்திய மண்டலப் பரிசினையும் பெற்றுக்கொண்டான். கல்லூரியிலே பயிலாதபோதும் தனது சொந்த முயற்சியினாலும் தான் கொண்ட இலட்சிப் பற்றினாலும் மக்களை நன்கு புரிந்துகொண்டு மக்களிடம் தான் கற்றுக் கொண்டவற்றை மக்களுக்காகவே எழுதினான், பேசினான், செயற்பட்டான்.

கே.டானியல் என்னுடன் எமது கட்சியில் மட்டும் இணைந்ததோடு நில்லாது எமது சமூகத்தாபனமான அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையுடன் அமரர் யோவேல் போல் தலைவராக இருந்த காலத்தில் இணைந்து அச்சமூகத்தாபனம் நடத்திய சாதி ஒழிப்புப் போராட்டங்களில் எல்லாம் முன்னின்று கலந்து சொல்லடியும், கல்லடியும், கம்படியும் பட்டபோதிலும்,

“அடிமை விலங்கறுப்போம்-அதில்  
ஆயுதங்கள் செய்திடுவோம்  
கொடுமை மிக மலிந்த -இக்  
குவலயத்தை மாற்றிடுவோம்”

என்று அஞ்சாது பணியாற்றினான். சம ஆசனம், சம போசனம் போராட்டத்திலும் சரி, தேநீர் கடைப் பிரவேசம், ஆலயப் பிரவேசம் போன்ற போராட்டங்களிலும் சரி எந்தப் பகுதியில் சாதியின் பெயரால் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டபோது, அவர்களின் உறைவிடங்கள் எரிக்கப்பட்டபோது, சாதிவெறியர்கள் துப்பாக்கி கொண்டு விலங்குகளை வேட்டையாடியது போன்று அப்பாவி மக்களைச் சுட்டுப் பொசுக்கியபோதெல்லாம் எங்களுடன் தோளோடு தோள்கொடுத்துப் போராடிய ஒரு வீரம் செறிந்த போராளி கே.டானியல். யார் யாருக்கு விடுதலை வேண்டுமோ அவர்களுக்கிடையே இருந்துதான் போராட்டங்கள் வெடிக்க வேண்டும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டு செயற்பட்டார்.

எமது சமூகத்தாபன அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தொண்டனாக மட்டுமல்லாது




சில ஆண்டுகள் உப தலைவராகவும் கடமைபுரிந்தார். இதுபோன்றே எமது கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிபர் சங்கத்திலும் முக்கிய பொறுப்புக்களை வகித்தார்.

1963இன் பின்னர் எமது கட்சியைவிட்டும், சமூகத்தாபனத்தை விட்டும் வெளியேறியபோதிலும் அவரது இலட்சிய வேட்கையில் எதுவித மாற்றமுமின்றித் தீவிர அரசியல் போக்குடைய அரசியல் தாபனத்துடனும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்துடனும் இணைந்து தனது பணியினைத் தொடர்ந்தார். எமது பக்கத்தை விட்டு வெளியேறிய போதிலும், சமூகரீதியான பொதுப்பிரச்சனைகளின் போதெல்லாம் அவ்வப்போது என்னைச் சந்தித்து ஆலோசனைகள் கலந்துரையாடல் செய்யப் பின்னின்றதில்லை. ஆற்றல்மிக்க படைப்பாளியாக, விடாமுயற்சி உடைய உழைப்பாளியாக, இலட்சியப் பற்றுமிக்க போராளியாக, அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் கே.டானியல். சாதாரண ஆசிரியர்களிடம் கூட முறையாகக் கல்வியினை முழுமையாகப் பெறமுடியாத கே. டானியல் இன்று பல்கலைக்கழகப் போராசிரியர்களால் போற்றிப் புகழப்படுகிறார் என்பதனை நினைக்கும் பொழுது, "மக்களுக்காக வாழ்பவர்கள் என்றும் மக்களால் மதிக்கப்படுவார்கள் என்ற உண்மை புலனாகிறது. எனது நினைவலைகளில் கே.டானியலின் நினைவுகள் என்றும் பசுமையானவை.

**(தோழர் கே. டானியலின் மரணத்தின் போது எம்.சி. அவர்கள் ஆற்றிய இரங்கலுரை.)**
**நன்றி: "எம்.சி. ஒரு சமூக விடுதலைப் போராளி." தொகுப்பாசிரியர் - எஸ். சந்திரபோஸ்.**

[redacted]



www.tamilarangam.net

சம வாய்ப்பில்லாத இடத்தில் சம போட்டிகளை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆயிரக் கணக்கான வருடங்களாகக் கல்வி வாய்ப்புகள் மறுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களையும் கல்வியைத் தமது தனியுடைமையாகப் பரம்பரையாக வைத்திருந்த சாதியினரையும் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் நேரடிப் போட்டியில் ஈடுபடுத்தல் நீதியாகாது. இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்களின் - பிற்படுத்தப்பட்ட மக்களின் இரத்தம் சிந்திய போராட்டங்களுக்குப் பின்னால் கல்வியிலும் வேலையிலும் தேர்தல் தொகுதிகளிலும் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் இட ஒதுக்கீடும் தனி வாக்காளர் தொகுதிகளும் சாத்தியமாகியிருக்கின்றன.

இதே இட ஒதுக்கீடுக் கோரிக்கைகள் 1940களிலேயே ஈழத்துத் தலித் மக்களின் அமைப்பான சிறுபான்மைத் தமிழர் மகாசபையால் வலியுறுத்தப்பட்டது. அரசும் சரி இடதுசாரிகளும்சரி தமிழ்த் தேசியர்களும் சரி இந்தக் கோரிக்கையைக் கவனிக்கவேயில்லை. ஈழத் தமிழ் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினராயிருக்கும் தலித் மக்கள் மத்தியிலிருந்து இதுவரை இரண்டே இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள்தான் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். தலித்துகளிற்கான தனிவாக்காளர் தொகுதிகள் இந்தியாவைப் போலவே இங்கேயும் சாத்தியப்பட்டிருந்தால் ஆகக் குறைந்தது அய்ம்பது தலித் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்திருப்பார்கள்.

எனவே இந்த முன்னுரிமையை வழங்குவதற்காகத்தான் இந்திய அரசு சாதிச் சான்றிதழ்களை வழங்குகிறது. முன்னுரிமையை வழங்குவதற்காகத்தான் பாடசாலையிலும் அரசுத் துறைகளிலும் சாதிச் சான்றிதழைக் கேட்கிறார்கள்.

இந்த இடஒதுக்கீடால் பார்ப்பனர்களும் மற்றைய உயர்சாதியினரும் பாதிக்கப்டுகிறார்கள் எனக் கூறி ஆதிக்கசாதி வெறியர்கள் நேரடியாகவே இடஒதுக்கீடுக்கு எதிரான வன்முறைகளில் இறங்குவதுண்டு. இதை மண்டல் கமிஷன் அமுல்படுத்தப்பட்போதும் அண்மையில் மருத்துவத் துறையில் இடஒதுக்கீடு பரிந்துரை செய்யப்பட்டபோதும் கண்டோம். சில புத்திசாலிப் பார்ப்பனர்கள் கலை இலக்கியத் தளங்களிலும் இடஒதுக்கீடுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதுண்டு. குமுத்தில் ஒரு பக்கங்கள் எழுதும் ஞாநியும் ஒரே ஒரு கிராமத்திலே - ஜென்டில்மென் போன்ற படங்களை உருவாக்கிய பார்ப்பனர்களும் இதனை நாசூக்காகச் செய்தார்கள். இந்தப் பார்ப்பனத் தந்திரத்தின் இன்னொரு முகம்தான் கமல் ஹாஸனின் கூற்று. வைதீகப் பார்ப்பானைவிட லௌகீகப் பார்ப்பான் ஆபத்தானவன் என்று பெரியார் சும்மாவா சொன்னார்.

### *4.. தாழ்த்தப்பட்ட சமூகத்திலிருந்து வந்த மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசனின் படுகொலையைச் சாதியொழிப்பு அரசியல் பேசுகிறவர்கள் கூட கண்டுகொள்ளாதது நியாயமா?*

நியாயமற்றது. புலிகளுக்குத் துதிபாடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் மட்டுமே அவரின் கொலையைக் குறித்துத் தலித் அரசியலாளர்கள் பேசாமலிருப்பார்கள் என்றால் அது மகாதவறு.
2005ல் வரணியில் ஆதிக்கசாதியினர் தலித் மக்கள் தண்ணீர் அள்ளுகிறார்கள் என்ற காரணத்தால் கிணற்றில் பாம்பை அடித்துப் போட்டார்கள். இதைத் தொடர்ந்து நடந்த மோதல்களைப் பேச்சுவார்த்தையின் மூலம் முடிவுக்கு கொண்டு வந்தவர் சிவநேசன். முப்பது வருடங்களுக்குப் பின்பு தலித் மக்களின் மத்தியிலிருந்து வந்த பாராளுமன்ற உறுப்பினர் அவர். ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒரு ஆளுமை - எந்தக் காலத்திலுமே ஆயுத அரசியலில் ஈடுபடாத ஒரு மனிதர் கொல்லப்பட்டது எமக்குப் பேரிழப்பே.

### 6. ஈழப்போராட்டத்தின் பின்னான காலங்களில் சாதிய ஒடுக்குமுறை ஒழிக்கப்பட்டுவிட்டது எனச் சொல்கிறார்களே?

சாதி இப்போது எங்கேயிருக்கிறது? யார் சாதி பார்க்கிறார்கள் என்ற வெள்ளாள விசமம் இன்று நேற்றா நடக்கிறது. இந்தச் சொல்லாடல்கள் தமிழரசுக் கட்சி காலத்திலிருந்தே சொல்லப்பட்டுத்தானே வருகின்றன.


சி.கா. செந்திவேலும் ந. இரவீந்திரனும் இணைந்து எழுதிய இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் என்று வரலாற்று ஆய்வு நூலின் செழுமைப்படுத்தப்பட்ட இரண்டாவது பதிப்பு அண்மையில் வெளியாகியுள்ளது. அந்த நூலில் தமிழ்த் தேசிய ஆயுதப் போராட்டம் கூர்மை பெற்றதற்குப் பின்னாகவும் ஈழத்தில் தொடரும் சாதியக் கொடுமைகள் குறித்து விரிவாகவே ஆதாரங்களுடன் எழுதப்பட்டிருக்கிறது. சாதியொழிப்புப் போராளிகள் ஒவ்வொருவரும் வைத்திருக்க வேண்டிய கைநூல் அது. ஆய்வாளர்களுக்கு பேருதவி செய்யக் கூடிய போராட்ட ஆவணமது. தோழர்கள் கண்டிப்பாக அந்த நூலைப் பயில வேண்டும்.

மீண்டும்.........

ஒரு காலத்தில் உலகத்திற்கு நாகரீகத்தை கற்றுக்கொடுத்த மக்களை இன்று கல்லையும், மண்ணையும், சாணியையும், கடவுள் என்று கருதி இருக்கிற நிலமைக்க மட சென்மங்களாக்கி இழிவுபடுத்திக் கடந்த 3000 வருடமாக இந்த நிலையிலையே இருக்கச் செய்திருக்கிறார்கள் என்றால் இதற்கு என்ன அர்த்தம்? இந்த மக்களுக்கு ஆராயும் புத்தி இருந்திருந்திருந்தால் இந்த நிலை ஏற்படுமா?

-

பெரியார்-




"இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்", எம்.சி. ஒரு சமூக விடுதலைப் போராளி" எனும் இரு நூல்களின் அறிமுகங்களுடன், அந்நூல்களின் விமர்சனம் கருதியும் 21செப்டெம்பர் 2008 ஞாயிறு பிற்பகல் 2மணிக்கு ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வானது மிகச்சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வானது பிரான்சிலுள்ள இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினரால் ஒழுங்கு செய்யப்பட்டது.

பி.பகல் 2 மணிக்கென அறிவிக்கப்பட்டிருந்தபோதும் கூட்டம் 3மணியளவிலேயே ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்விற்கென லண்டன், ஜேர்மன், நோர்வே போன்ற நாடுகளிலிருந்தும் ஆர்வலர்கள் சமூகமளித்திருந்தனர்.

"தோழர்களே நண்பர்களே அனைத்துத் தேசம் தழுவியும், ஒவ்வொரு சமூகங்களும், இனங்களும், அடையாளங்களும், பேசியும், போராடியும், உரிமைகளை வலி யுறுத்தியும், இழந்த வற்றை மீழப்பெற்றும், பெற்றவற்றை இழந்தும் என அதனது சாரம், அதனது வரலாறு எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இவ்வாறாக வரலாற்றை கேள்விக்குட்படுத்துகின்ற, மீண்டும் திருப்பி எழுதுகின்ற, மீண்டும் கேள்விக்குட்படுத்துகின்ற ஒரு சிந்தனையும் படிப்புமுறையுமாக ஒரு சமூகம் நகர்ந்து கொண்டிருக்கும்போது, அதனுடைய ஒரு தொடர்ச்சியாகவே போராட்டங்களும் இருக்கின்றது.



உரிமைகளையும் வாழ்க்கையையும் உறுதிப்படுத்துவதற்கும் இந்த மனிதகுலத்தின் வாழ்வனுபவத்திற்காகவும் தங்கள் இன்னுயிர்களை ஈர்ந்து, தங்கள் வாழ்க்கையை துறந்து, அளப்பரிய தீயாகங்களைப் புரிந்து, இன்று நம் நினைவுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற, நினைவுகளிலிருந்து தப்பிப்போன, மறந்து போன அனைத்து மக்களுக்குமாக நாம் எழுந்திருந்து அஞ்சலி செலுத்துவோம்." என தனது வரவேற்புரையை தொடங்கினார் நண்பர் சுகன் அவர்கள்.

மேலும் சுகன் தனது வரவேற்புரையில் "கருத்தை கருத்தால் வெற்றிகொள்ளும் நிலை அருகிப்போய் அதற்கு வேறுவகையான தீர்வுகள் மேற்கொள்ளும் போதெல்லாம் நாம் எமது கண்டனங்களை தெரிவித்து வருகின்றோம். நிலைநாட்டல் என்பது கருத்தை மாற்றுக்கருத்தால் எதிர்கொள்வதே ஆகும். எனவே அவ்வாறான மரபை நாம் பேணுவதை இலட்சியமாக்கிக் கொண்டு இன்று இவ்விரு புத்தக அறிமுக-விமர்சனக் கலந் துரையாடலுக்கு வருகைதந்த அனைவரையும் நன்றியுடன் வர வேற்றுக்கொள்கின் றோம்." என தனது வரவேற்புரையை நிறைவுசெய்தார்.



மேலும் தொடர்ந்து நிகழ்வை நெறிப்படுத்தும் பணியை தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் உறுப்பினரான கவிஞர் அருந்ததி அவர்கள் மேற்கொண்டார். அவர் தனது தலைமை உரையில், இன்று எம்மத்தியில் பல கேள்விகள் எழுப்பப்படுவதை நாம் அறிவோம். அதாவது தலித் என்ற சொல்லாடல் பாவிப்பது சரியா பிழையா என்பதிலிருந்து, தலித் சமூக மேம்பாட்டு முன்னணி அவசியம்தானா என்பது வரையும், அதனது அரசியல் என்ன ,அதனது பின்புலம் என்ன, இது சாதித்தது என்ன, இதனது வேலைத்திட்டங்கள் என்ன என்பதாக கேள்விகள் நீண்டுகொண்டே போகின்றதையும் நாம் அறிவோம். இதற்காகவே எமது முன்னணியின் பத்திரிகையான "வடு" வில் இதுபோன்ற கேள்விகளுக்காகன பதில்களும், விளக்கங்களும் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனினும் இதுசார்ந்த பூரணமான விளக்கங்களை தருகின்ற நிகழ்வாகவும் இது அமையும்.

இந்த நூலுக்குள் நுழைந்தால் இன்று கால்நூற்றாண்டுக்கு முன்பாக நடந்த சம்பவங்களை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம். இன்று சாதியம் பற்றி பேசுவது குறைபாடாகவும், ஒரு பிழையான விடயமாகவும் பலரால் கணிக்கப்படுகின்றது. அதாவது சாதியம் பற்றிப் பேசுவது தேசியவிடுதலைப் போராட்டத்திற்கு எதிரான செயல்பாடு என்று சொல்பவர்களும் உண்டு. தேசியவிடுதலைப் போராட்டத்தில் சாதியம் ஒழிந்து விட்டது என்று கூறுபவர்களும்



www.tamilarangam.net

உண்டு. புலம்பெயர் நாடுகளில் சாதியம் இல்லை நாங்கள்தான் அதைக் கதைத்து விதைத்து வளக்கிறோம், பேணுகிறோம் எனும் குற்றச்சாட்டுக்களும் எம்மீது உண்டு. எனவே இந்த சாதியம் என்பது எவ்வாறு கால்நூற்றாண்டுக்கு முதல் இயங்கியதென்பதும், இப்போது அது எம்மத்தியில் எவ்வாறு இன்னொரு முகத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதும், எப்படி இந்த சமூகத்தின் வளர்ச்சிக்கு இது தடையாக இருக்கின்றது என்பதும் மிகுந்த நுணுக்கமாக பார்க்கப்படவேண்டிய ஒன்று. அதற்கு இந்த நூல்களின் விமர்சனங்களுக்கு பின்பான கலந்துரையாடலில் ஆரோக்கியமான பதில்கள் கிடைக்கும் என்று நான் நம்புகின்றேன். அந்த நம்பிக்கையோடு இந்த நிகழ்வினை முடிந்தவரை ஆரோக்கியமான முறையில் நடத்த ஒத்துழைப்பு தரவேண்டுமென உங்களை நான் கேட்டுக் கொள்கின்றேன்." என தலைமையுரையாற்றிய அருந்ததி அவர்கள் வெகுஜனன், இராவணன் ஆகியோர் எழுதிய நூலான "இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்" எனும் நூல்பற்றிய ஆய்வினை வழங்க தோழர் வி.ரி. இளங்கோ அவர்களை அழைத்தார்.




தோழர் வி.ரி.இளங்கோ அவர்கள் தோழர் கே.டானியலுடன் மிக நெருக்கமான உறவைப்பேணியவர். டானியல் அவர்கள் இறக்கும் தருணத்திலும் அவருடன் அருகில் இருந்தவர். "இலங்கையின் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்" எனும் நூல் தனக்கு தாமதமாகக் கிடைத்ததால் முழுதாக வாசிக்க முடியவில்லை எனக் கூறினார். எனினும் தோழர் சண்முகதாசனின் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடனும் தோழர் கே.டானியலுடனும் பழகிய சில அனுபவங்களை தான் பகிர்ந்து கொள்ள விரும்புவதாகக் கூறினார். அந்தவகையில் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் சாதி எதிர்ப்புப் போராட்டங்கள் பற்றியும், தோழர் டானியலுடன் இணைந்து மேற்கொண்ட களப்பணிகள் பற்றியும் மிக விரிவாகப் பேசினார். 1966 ஆம் ஆண்டு ஒக்டோபர் 21 ஆம் திகதி நிகழ்ந்த அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவான ஊர்வலம் பற்றிய தகவல்களையும் தோழர் வி.ரி இளங்கோ அவர்கள் விபரித்துக் கூறினார்.

அடுத்த நிகழ்வாக நூல் வெளியீட்டு நிகழ்வு இடம் பெற்றது. "எம்.சி. ஒரு சமூக விடுதலைப் போராளி" எனும் நூலை இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் தலைவர் தேவதாசன் அவர்கள் வழங்க கலைஞர்.பெஞ்சமின். இமானுவேல் அவர்கள் பெற்றுக் கொண்டார். இமானுவேல் அவர்களின் தந்தையான பெஞ்சமின் அவர்கள் தோழர் எம்.சி அவர்களுடன் சமூகப்பணியாற்றியவர் என்பதை அறிந்த காரணத்தால் கலைஞர் இமானுவேல் அவர்கள் மூலமாக வெளியிடுவதே தகுதியானதெனக் கருதப்பட்டது.

வடமாகாணத்தின் கரவெட்டி எனும் கிராமத்தைச் சேர்ந்த திரு தங்கமணி அவர்கள் சாதியப் போராட்டத்திற்கு ஆதரவாக பொருளாதார உதவிகள் செய்தவர். அதன் மூலமாக திரு தங்கமணி அவர்கள் பல சொத்துக்களையும் இழந்தவர் எனும் செய்தி வெளியில் தெரியாத விடயம். அவரின் பெருந்தன்மையைக் கௌரவிக்குமுகமாக இரண்டாவது நூலான "இலங்கையில் சாதியமும் அதெற்கெதிரான போராட்டங்களும்" எனும் நூலை திரு தங்கமணி அவர்களின் புதல்வனான புஸ்பாகரன் மூலமாக வெளியிடப்பட்டது.

"இலங்கையின் தெற்கில் இரண்டெழுத்துக்களால் பிரபல மடைந்தவர்கள் ஜே.ஆர், என்.எம், கே.பி எனும் மூவர்களாகும். தமிழ் பகுதிகளிலே இரண்டு எழுத்துக்களால் கவரப்பட்ட தலைவர்கள் வி.பி (வி.பொன்னம்பலம்) ஜீஜீ (ஜீ.ஜீ.பொன்னம்பலம்) எம்.சி (எம்.சுப்பிரமணியம்) எனும் மூவர்களாகும். வி.பி,பொருளாதார மேதை. ஜீ.ஜீ, சட்டவல்லுனர். எம்.சி, சமூக விடுதலைப்போராளி" என்பதாக இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் உறுப்பினரான தோழர் யோகரட்ணம் அவர்கள் எம்.சி. ஒரு சமூக விடுதலைப்போராளி எனும் நூலின் தலைப்புக்கு அமைய தனது பேச்சைத் தொடங்கினார். எம்.சி அவர்கள் தனது பிஞ்சு வயதிலேயே சாதிய ஒடுக்குமுறையை எதிர் கொண்டவர். அவருக்கு பாடசாலையில் அமர்வதற்கு ஆசனம் மறுக்கப்பட்டது. வெறும் நிலத்திலேயே அமர்ந்த கல்விகற்க வற்புறுத்தப்பட்டது. இதனாலேயே அவர் சமூக விடுதலைப் போராளியானார். என்பதாகக் கூறியதோடு இலங்கைக்கு திரு. காந்தி அவர்கள் வந்தபோது எம்.சி அவர்களுக்கு காந்தி மாதுளம் பழம் கொடுத்த கதையையும் சொன்னதோடு. மேலும் தான் எம்.சி யுடன் பழகிய பல அனுபவங்களையும் விபரித்தார்.




அடுத்ததாக "இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்" எனும் நூல்பற்றிப் பேசுவதற்கு ஆசிரியர் பெர்னாண்டோ அவர்கள் அழைக்கப்பட்டார். "தோழர். வி.ரி. இளங்கோ தோழர்.யோகரட்ணம் ஆகியோர் சாதியப் போராட்டங்களின் நேரடி அனுபவமுள்ளவர்கள். எனக்கோ அவ்வாறானா அனுபவங்கள் ஏதும் இல்லை இருப்பினும் தலித் சமூகம் பட்ட துன்பங்கள் துயரங்கள் போராட்டங்கள் என அனைத்தையும் தெரிந்து கொண்டவன் என்றவகையில் நான் சில கருத்துக்களை உங்கள் முன்வைக்க விரும்புகின்றேன்" என தனது பேச்சைத் தொடங்கினார். பெர்னாண்டோ அவர்கள் வரலாற்று ரீதியான மக்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடப்பெயர்வுகளும் அதனோடு மதங்கள் பெறும் முக்கியத்துவங்கள் பற்றிய சில வரலாற்றுக்குறிப்புகளையும் கூறினார். மேலும் தலித் மக்களுக்கான கல்வி மறுக்கப்பட்ட சூழல்களையம், கோவில் பிரவேசம் மறுக்கப்பட்டதையுமு, அதெற்கெதிரான போராட்டங்கள் பற்றியெல்லாம் இந்த நூல் விரிவாக ஆராய்ந்துள்ளதென்பதையும் குறிப்பிட்டார். மேலும் தான் வன்னிமாவட்டத்தைச் சேர்ந்தவனாதலால் வடக்கிலே நிகழ்ந்த சாதியக் கொடுமைகளின் நேரடி அனுபவம் இல்லாவிடினும் தானும் ஒரு தலித்தாக வன்னிமாவட்டத்தில் எதிர்கொண்ட சாதிய ஒடுக்குமுறை அனுபவங்களையும் விபரித்தார்.

எனக்குத் தெரிந்த எம்.சி" என்ற தலைப்பில் தான் பேச விரும்புவதாக நோர்வேயிலிருந்து வருகை தந்த முகமது ஹாசிம் ரகூப் அவர்கள் அடுத்ததாக உரையாற்றினார். ஹாசிம் ரகூப் அவர்கள் எம்.சி அவர்களுடன் நெருங்கிப் பழகியவர். அவர் பேசும் போது எம்.சி யை நான் இரண்டு வகையாகப் பார்க்கிறேன் என்றார். ஒன்று 70 ஆம் ஆண்டுக்கு முன்பாகவும் 70 ஆம் ஆண்டுக்கு பின்பாகவும் என இரண்டு காலங்களில் அவர் மேற்கொண்ட சமூகப் பணிகளின் வேறுபாடுகள் தான் அந்த இரண்டுவகை எனக்குறிப்பிட்டார். எனக்குத் தெரிந்த எம்.சி மனிதனை மனிதன் சுரண்டுவதற்கு எதிரான போராட்டத்தில்தான் ஈடுபட்டார் என்று நான் சொல்வேன். மேலும் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்களுடன் இணக்கமாக வாழவேண்டும் என வலியுறுத்திய முதலாவது மனிதனாக நான் எம்.சியைத்தான் குறிப்பிடுவேன். யாழ்ப்பாணத்தில் உங்களுக்கு நடந்த கல்விமறுப்பு சமூக புறக்கணிப்புகள் போல முஸ்லிம் மக்களுக்கு நெருக்கடிகள் இருக்கேல்ல. உங்களுக்கு நடந்த அவலங்களை நான் நேரில் அறிந்தவன். கல்வித் தரப்படுத்தல் என்பது பெரிய பிரச்சனை தான்.எனக்குத் தெரிந்து முதல் முதலாக கல்வித்தரப்படுத்தலைச் செய்தது யாழ்ப்பாண இந்துக் கல்லூரி. 88 புள்ளிகள் எடுத்த ஒரு முஸ்லிம் மாணவனுக்கு அங்கு அனுமதி மறுக்கப்பட்டது. 76 புள்ளிகள் எடுத்த இந்து மாணவனுக்கு அனுமதி இலகுவாகக் கிடைத்தது. நான் தலைமை ஆசிரியரிடம் கேட்டபோது தம்பி இது இந்துப் பள்ளிக்கூடம் இங்கு முஸ்லிம் கல்விகற்பதற்கான தகுதிக்கு 88 புள்ளிகள் போதாது எனக்கூறினார். ஆகவே தரப்படுத்தல் எங்கே இருந்தது என்று நீங்கள் யோசிக்க வேணும். என்று பேசியதோடு மேலும் எம்.சி பற்றிய பல தகவல்களையும் ரகூப் அவர்கள் கூறினார்.



## கலந்துரையாடல்

இதில் முதலாவதாக தேவதாஸ் அவர்கள் தலித் சமூகமேம்பாட்டு முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்விற்கு வந்தவர்களுக்கு நன்றி தெரிவித்து கலந்துரையாடலிலும் கலந்துகொண்டு உரையாற்றினார். தொடர்ந்து பேசுகையில் இங்கு நூல் விமர்சன நிகழ்வு எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் விமர்சனப் பாங்கில் இங்கு உரைகள் நிகழ்த்தப்படவில்லை என்றே தோன்றுகின்றது. பெர்ன்னாண்டோ அவர்கள் “இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்" எனும் நூலைத் தொட்டுப் பேசியபோதும் விமர்சனப் பாங்கில் அது அமையவில்லை என்றே கருதுகிறேன். இந்நூலை மதிப்பீடு செய்ய டென்மார்க்கில் இருந்து நண்பர் கரவைதாசன் வருவதாக இருந்தார். ஆனால் அவரின் குடும்பத்தில் நிகழ்ந்த ஓர் அசம்பாவித சம்பவம் காரணமாக அவர் சமூகமளிக்க முடியாது போய்விட்டது. இன்று யாழ்ப்பாணத்தில் ஓர் இன அழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கன்பொல்லைக் கிராமத்தில் நடந்ததுபோல் வேலனைக் கிராமத்திலும் தலித்துக்கள் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கொல்லப்பட்டவர்கள் யாவரும் அச்சமூகத்தில் செல்வாக்கு மிக்கவர்களாகவும் பல தொண்டுகள் புரிந்தவர்கள் என்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் எமக்கு உறுதிப்படுத்துகின்றன. இவ்வாறு தலித் ஒருவர் சமூக செல்வாக்குடன் மேலோங்குவதை சகிக்க முடியாத உயர்சாதியினர் ஈ.பி.டி மூலமாகவோ, புலிகள் மூலமாகவோ, அல்லது இராணுவத்தின் மூலமாகவோ கொலை செய்யத் தூண்டுகின்றனர். வேலணையில் ஒருவர் சுட்டுக்கொலை, சாவகச்சேரியில் ஒருவர் சுட்டுக் கொலை என்பதாக செய்திகள் தரும் மாற்றுக்கருத்து ஊடகங்கள் கூட இதை ஒரு செய்தியாக தமது ஊடகங்களுக்கு தீனி போடுகிறார்களே அல்லாது இவ்வாறான கொலைகளுக்குப் பின்னாலுள்ள அரசியலை கண்டுகொள்ள விரும்புகிறார்களில்லை. நான் சொல்லுகிறேன் இது தலித் மக்களை இல்லாதொழிக்கும் ஓர் இனச் சுத்திகரிப்பாகவே இவைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே இவ்வாறான கொலைகள் எப்படி நடக்கிறது, அதனுடைய அரசியல் என்ன என்பதை நீங்களும் அறியமுயற்சி செய்ய வேண்டும் என்றும் அப்படியான கொலைகளை தொடராமல் தடுப்பதற்கு எவ்வகை வழிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் உங்களை நான் கேட்டுக்கொள்கின்றேன். எனக் கூறி தனதுரையை நிறைவுசெய்தார்.

1972 ஆம் ஆண்டு குடியரசுச் சட்டம் வரும்போது எம்.சி அவர்கள் அரசாங்கத்தோடு ஆதரவாக இருந்ததற்கான வலுவான ஒரு காரணம் இருந்துள்ளது. சாதியப்பொராட்டத்திற்கு பல்வேறு ஆதரவுகளைப் பெறுவதற்கான வாய்ப்பாக அதை பயன்படுத்த அவர் முனைந்துள்ளார் என்பதுவே அதுவாகும். அதேகாலட்டத்தில் இன்னோரு வரலாறும் தொடங்கியதையம் நாம் காணலாம். அதாவது தேசியவிடுதலை எனும் பெயரில் எழுச்சியும் நடைபெற்றுக் கொண்டிருந்ததையும் நாம் காணலாம். ஆனால் இந்த தேசிய விடுதலை எனும் வரலாறுதான் தமிழ் மக்களின் வரலாறு என்பதாகக் காட்டப்படுகிறது. அனால் இதைவிட ஓர் வரலாறு ஒழித்து மறைக்கப்பட்டிருக்கிறதென்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். நண்பர் தேவதாஸ் சொன்ன விடயம் பற்றி யோசிக்க வேண்டியள்ளது.

www.tamilarangam.net



இயக்கங்களுக்கு சாதியம் பற்றிய பார்வைகள் போதாதென்றே நான் கருதிகின்றேன். அதே நேரம் புலிகளாகட்டும் ஈ.பிடி.பி ஆகட்டும் அனைத்து இயக்கங்களும் தலித்துக்களைத்தான் பயன் படுத்துபவர்களாகவும் அதே நேரத்தில் தலித்துக்களே கொலை செய்யப்படுபவர்களாயும் உள்ளனர். இதை நாம் பல்வேறு தளங்களிலே வெளிப்படுத்தும் வேலைகளை மேற்கொள்ள வேண்டும்" எனும் கருத்தோடு மேலும் பல கருத்துக்களை தெரிவித்தார் நண்பர் ராகவன் அவர்கள்.

"தலித் முன்னணியானது திசவிதாரணவிடம் அறிக்கைகள் கையளிப்பதோடு மட்டும் தனது வேலைகளில் திருப்தியடைந்து விடக்கூடாது. தலித் முன்னணி சர்வகட்சி மாநாட்டிலும் அங்கத்துவம் பெறவெண்டும். இப்ப தேர்தல் ஒன்று நடந்தால் தலித்துக்கள்தான் நிர்ணயசக்தி. இப்ப தலித்துக்கள் அங்கு சிறுபான்மை இனம் அல்ல. அவர்கள்தான் குடாநாட்டில் 80 வீதமானவாகள். எனவே தலித்துக்கள் அரசியலில் நேரடி அங்கத்துவம் பெறவதுதான் பல பிரச்சனைகளைத் தீர்க்க உதவியாக இருக்கும்" என்பதாக கீரன் அவர்களின் கருத்து வெளிப்பட்டது.

"உங்களுக்குத் தெரியும் நான் பொதுவாக பேசவாறேல்ல எண்டு. நான் ஏதும் பிழையா சொன்னாக்கூட நாங்கள் நண்பர்கள் இது நண்பர்களுக்கிடையிலான விடயமெண்டு எடுத்துக்கொள்ளங்கோ அதைவிட்டு இதை யாரும் தயவுசெய்து "தேசம்நெற்றில" போய் எழுதிப்போடாதயுங்கோ." என்றவாறு சோபாசக்தி அவர்கள் தனது கருத்தைச் சொல்வதற்கு முன்வந்தார். இது வந்து மிக முக்கியமான புத்தகம். கிட்டத்தட்ட இலங்கையிலுள்ள சாதியமைப்பின் தோற்றம், அதனுடைய போராட்டங்கள் பற்றிய தகவல் அடங்கிய மிகக் கடுமையான உழைப்பில் உருவாக்கப்பட்ட ஒரு ஆவணம். இங்கு பேசியவாகள் யாருமே இந்த நூலை சீரியசாக அணுகவில்லை. இந்த நூல் முன்வைத்த அரசியல் பார்வைகள், அரசியல் தீர்வுகளென ஆயிரம் இருக்கட்டும். இந்தப் புத்தகம் வந்து ஒரு ஆவணக் களஞ்சியம். கடந்த நூறு வருடங்களாக இலங்கையில் நடந்த தலித் போராட்டங்கள் , எத்தனை தலித் அமைப்புக்கள் இருந்தன, அவை எங்கே முடக்கப்பட்டன, 1966 இன் ஒக்டோபர் எழுச்சி என்ற பலவகையான விடயங்களைக் கொண்ட ஆவணம். சாதி ஒழிப்புப் போராட்டத்தில் எங்களைப்போல சமூக அக்கறையுடையோருக்கு இது ஒரு கைநூல்...., ஒரு பைபிள். அதிகளவிற்கு இந்த நூலிலே நாங்கள் விமர்சிக்கக்கூடிய சரிபாதிப் பிழைகள் உள்ளன. அந்த விடயம் இங்கு பேசப்படவில்லை அதாவது விமர்சனப் போக்கு இங்கு நிகழவில்லை. சாதிப்பிரச்சனையைப்பற்றி எம்மத்தியில் பேசிய ஒரே ஒரு நூல் இதுதான். சி.கா. செந்திவேல். ந. இரவீந்திரன் போன்றோரின் புதியஜனநாயகக் கட்சியின் அரசியல் பார்வையில் இருந்தே இந்நூல் எழுதப்பட்டிருக்கின்றது. இப்புத்தகத்தை உன்னிப்பாக படிப்பீர்களாயின் எம்.சி.சிப்பிரமணியம் அவர்களை இந்நூல் கடுமையாக விமர்சிப்பதை நீங்கள் அறிவீர்கள். எம்.சி சுப்பிரமணியம் அவர்கள் சாதி ஒழிப்பிற்காக எதுவுமே செய்யவில்லை என்பதாகக்கூட சொல்லப்படுகிறது. தலித் அரசியலையும் இது நிராகரிக்கின்றது. அதுமட்டுமல்லாது அம்பேத்கர். பெரியார் போன்றவர்களையும் இந்நூல் நிராகரிக்கின்றது. இவர்கள் மார்க்சியப் பார்வையிலே சாதியப்போராட்டத்தை அணுகியுள்ளார்கள். இவர்கள் பேசுவது மார்க்சியமா என்பது வேறுவிடயம். என்பதாக சோபாசக்தி அவர்கள் தனது கருத்தை முன்வைத்தார். அத்துடன் மேலும் பலருடைய கலந்துரையாடல்களுடன் கூட்டம் நிறைவடைந்தது.லண்டனிலிருந்து வருகைதந்த காண்டீபன், ராகவன், கீரன் ஆகியோர் இதே நூல்களை லண்டனிலும் தாம் வெளியிட விரும்புவதாக தெரிவித்துள்ளனர்.

**லண்டனிலிருந்து வருகைதந்த காண்டீபன், ராகவன், கீரன் ஆகியோர் இதே நூல்களை லண்டனிலும் தாம் வெளியிட விரும்புவதாக தெரிவித்துள்ளனர்.**

கற்பிதப்படுத்தப்பட்ட அனைத்துப் புனிதங்கள் மீதான விமர்சனங்களை முன்வைப்பதும், இலங்கை தலித் அரசியல் பண்பாட்டுக் கலாசார மேம்பாட்டுக்குமான கருவியாகவும் உலாவும் மின் சஞ்சிகையே.....

"தூ"

புதிய எமது இணையத்தள முகவரி www.thuuuu.net

**இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் (பிரான்ஸ்) சார்பில் வெளிவரும் ஏடு.**